

# திருஷ்டி நீக்கும் பரிகாரங்கள்

நல்ல எண்ணங்கள் சாந்தமான கண்பார்வையாகவும் பொறாமை எண்ணங்கள் கெட்ட பார்வையாகவும் வெளிப்படுவதும் இயற்கை. இப்படி ஏற்படும் கெட்டபார்வை பலவிதங்களில் நமக்கும், மற்றவர்களுக்கும் அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது. நன்கு முன்னேறிய நிலையில் உள்ளவர் திடீர் என வீழ்வதும் இது போன்ற பார்வையால்தான். "திருஷ்டி"க்கு பல வித காரணங்கள் இருந்தாலும் அதை எப்படி சரிபடுத்துவது என்பது தான் மிக முக்கியம். முதலில் வீடுகளில் சீரான முன்னேற்றம் நிகழும் போது சரியான முறையில் பரிகாரம் செய்தால் திடீர் வீழ்ச்சியை தவிர்க்கலாம்.

**படிகாரம்:-** மிகச்சிறந்தவை படிகாரம்தான் ஏனெனில் ஒவ்வொரு கல் (சிலை)லுக்கும் ஒரு அதிர்வு உண்டு. அதில் இருந்து புறப்படும் அதிர்வெண் நம்மையும் வீட்டையும் காக்கும். இதற்கு படிகாரம் சரியான அளவில் சரியான இடத்தில் அமையவேண்டும். படிகாரத்தின் அடிப்பகுதி தடித்தும் மேற்பகுதி கூர்மையாக வும் இருக்கவேண்டும். படிகாரத்தை முடி கொண்டு கட்டி அந்தரமாக தொங்கவிடவும். மேலும் படிகாரத்தின் மருத்துவ குணம் உட லுக்கும் நல்லது. எத்தகைய தீய எண்ணங் களையும், தீய பார்வையையும் தடுக்கும்.

**சூலம்:-** வீட்டின் ஈசான்ய பகுதியில் வெளி சுவற்றில் கருங்கல்லில் சூலம் வைத்தல் நன்று. திருஷ்டி பரிகாரங்களில் துர்கைக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. "சூல துர்கா" என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. காவல் தெய்வமாகவும் சூல துர்கா" வேதத்தில் கூறப்பட்டுள்ளது. காவல் தெய்வமாகவும் சூலம் உள்ளது.

**வழிபாடு:-** எதிரி தொல்லை, கெட்டபார்வை நீங்க முருகருக்கு பூஜை செய்தல் நன்று. செவ்வாய் கிழமைகளில் "சத்ரு சம்ஹார திரிசதி" படிக்கலாம். வசதியிருப்பின் சத்ரு சம்ஹார திரிசதி ஹோமம் செய்யலாம்.

**பலி:-** எந்த ஒரு உயிரையும் கொல்லுதல் பாவம். கோழி, ஆடு போன்ற பலியை தவிர்த்து பூசனி, தேங்காய், எலுமிச்சை பலி தருதல் நன்று. பூசனியை அமாவாசையிலும், தேங்காயை தேய்பிறை சதுர்த்தி (சங்கட ஹர சதுர்த்தி)யிலும், எலுமிச்சையை வெள்ளி, செவ்வாய் கிழமைகளிலும் சுற்றி இடுவது நன்று. பூசனியில் ஒரு வேளை உணவிற்கு ஏற்ற வகையில் காசு இட்டு (2 ரூபாய் 9) உடைத்தல் நன்று.

**தூபம்:-** ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மாலையில் தூபம் போடுவது தீயவற்றை தடுத்து மனதில் புத்துணர்வை ஏற்படுத்தும், கெட்ட காற்றை நுழையாமல் தடுக்கும் மிக சிறந்த முறை யாகும்.

வீட்டின் முன்னர் தெய்வீக மனம் தரும் பவழ மல்லி, பாரிஜாதம், மல்லி, வில்வம் போன்றவற்றை வளர்த்தல் நல்ல பலன் தரும். மாடி இல்லங்களில் தும்பை, துளசி நன்று.

**கண்ணாடி:-** நுழையும் வழியில் நிலைக் கண்ணாடி வைப் பதும் பெருமளவு திருஷ் டியை குறைக்கும்.

**லட்சுமீகரம்:-** வீட்டை எப்பொழுதும் லட்சுமிகரமாக வைத்தல் மிகமுக்கியம். வாசலில் லட்சுமி கோலம் (8 அல்லது 16 இதழ் தாமரை), வாசற் படிக்கு மாவிலை தோரணம், தலை வாசலுக்கு மஞ்சள் குங்குமம் இடுதல், ஆகியவற்றை செய்வதன் மூலம் லட்சுமிகரம் வளரும்.

வெள்ளிக்கிழமைகளில் சாயங்காலங்களில் விளக்கு வைத்த பின்னர் திருஷ்டி சுற்றுவது மிக நீண்ட காலமாக வழக்கத்தில் உள்ள பழக்கம். இதுவும் மிகவும் நல்ல முறை. இதனால் லட்சுமி வரும் வெள்ளி மாலை நேரத்தில் திருஷ்டி நீங்கி மங்களம் பொங்கும்.

திருஷ்டியில் இடும் மிளகாய் நெடி சிந்தனையை மாற்றி அங்கிருந்து நகரச்செய்யும். இதனால் திருஷ்டி விலகும். ஆயினும் இது போன்ற நெருப்புள்ளவற்றை பாதசாரிகள் காலில் படாமல் ஓர் ஓரமாக வைத்தல் அவசியம்.

சிலர் தேவையில்லாத பொருட்களை எரிப்பார்கள். இது



கே.வி.பி.சரவண சர்மா
எண்:9, 4-வது தெரு, கல்யாண் நகர், சென்னை-45.

திருஷ்டி பரிகாரமில்லை. சுத்தப்படுத்தும் நோக்கம்தான் இதில் மேலோங்கியிருக்கும்.


சில இயற்கையான பொருட்களில் இருந்து வரும் மணம், மெல்லிய ஓசை ஆகியவை கூட நமது எதிரிகளின் மனதை மென்மையாக்கி அவர்களை சாந்தப்படுத்தும். குறிப்பாக எலுமிச்சை, சங்கு, படிகாரம் போன்றவை இது போன்றதுதான்.

வீட்டின் வாசலில் திருஷ்டி விநாயகர் வைப்பது தற்பொழுது பிரபலமாக இருந்தாலும் இதற்கு சரியான ஆகம விதி இல்லை. வாசலில் குல தெய்வம், அன்னம், மயில், யாளி, யானை இவைகள்தான் லட்சணம்.

விளக்கு மாடம் முன்னர் (இப்பொழுதும் கிராமங்களில் உள்ளது) முக்கியமான திருஷ்டி பரிகாரமாக கருதப்பட்டது. தீயில் அனைத்தும் அடக்கம் என்பதையே மாட விளக்கு மூலம் தெரியப்படுத்தினார்கள். தற்காலத்தில் தீபம் மனித காலுக்கு இணையாக தரையில் வைக்கப் படுகிறது. தீபம் 4 அடி உயரத்தில் உள்ள மாடத்தில் வைப்பதால் திருஷ்டியை குறைக்கலாம்.

குழந்தைகளுக்கு திருஷ்டி பொட்டு வைப்பது தொன்று தொட்ட பழக்கம். இது இன்றும் அனைத்து மதத்தினராலும் கடைபிடிக்கப்படும் ஒன்று. குழந்தையின் அழகை குறைத்து காட்டவே திருஷ்டி பொட்டு கன்னத்தில் வைக்கப்படுகிறது. காலப்போக்கில் இதை சிறியதாக வைக்கிறார்கள். இது தவறு. குழந்தையின் கரு விழி அளவு திருஷ்டி பொட்டு வைத்தல் நன்று.

## குழந்தையின் கருவிழி அளவு திருஷ்டி பொட்டு வைக்க வேண்டும்



## திருஷ்டி விநாயகர் வைப்பது பிரபலமாக இருந்தாலும் சரியான ஆகம விதி இல்லை

கணபதி ஹோமங்களில் கிடைக்கும் சாம்பலை நெய்விட்டு குழைத்து திருஷ்டி பொட்டு செய்ய வேண்டும்.

வீரக்ஷத்திரியர்கள் வீட்டில் கத்தியை வாசலில் தொங்கவிடுவது இன்றும் தென் தமிழகத்தில் வழக்கத்தில் உள்ளது. இதுவும் எதிரிகளின் தொல்லை நீங்க காவல் தெய்வத்திற்கு பூஜை செய்தபின் வாசலில் தொங்கவிடப்பட்டுள்ளது.

புது வீடு கட்டும் இடங்களில் வீட்டின் மேல் கூரை போட்டவுடன் திருஷ்டி பொம்மை வைப்பது நன்று. கழுதைப்படம், என்னைப்பார் சிரி என்பது போன்றவைகள் கூட மனதை நெறிப்படுத்தி 'திருஷ்டி' ஏற்படாமல் குறைக்கும்.

திருஷ்டி பரிகாரங்கள் அனைத்தும் ஆன்மீக வழியில்தான் அமையவேண்டுமே அன்றி மிருக பலி, அருவெருப்புத்தன்மை வழியில் அமைதல் மேலும் அமைதியை குலைக்கும்.

நல்ல எண்ணங்கள், தூய்மையான வழிபாடு, தர்ம சிந்தனை, இனிய பேச்சு, அண்டை வீட்டாருடன் நல் உறவு இவைகள்தான் சரியான திருஷ்டி தவிர்ப்பு முறை.

**செய்ய வேண்டியவை:-** தேவையில்லாமல் வீட்டின் உள் அறைகளை திறந்து வைக்கக் கூடாது. வாசல் கதவு மூடாமல் ரூபாய் எண்ண் வேண்டாம், உறவினர், நண்பர்களை ஒரு அளவிற்கு மேல் வீட்டின் அனைத்து பகுதிகளுக்கும் அனுமதிக்க வேண்டாம். பூஜை அறைக்கு யாரையும் அழைத்து காண்பிக்க கூடாது.

ஆண்கள் உடை உடுத்தாமல் வெளியாருடன் பேசுவது கூடாது. அதிக எண்ணிக்கை வாகனங்களை வீட்டின் முன்புறம் நிறுத்தவேண்டாம். மற்றவர்கள் எதிரில் பீரோவை திறக்கவேண்டாம்.

பெண்கள் கழுத்தில் நிறைய நகையை அணிந்து செல்லும் பொழுது போர்த்திக் கொண்டு செல்லவும். குழந்தைகளுக்கு திருஷ்டி பொட்டு அவசியம் கன்னத்தில் வைக்கவும்.

**தர்மம்:-** ஆயிரம் பரிகாரம் செய்தாலும் தர்ம வழிதான் மிக நல்லது. அண்டை வீட்டாருக்கு நம்மால் ஆன உதவி செய்வது, ஏழைகளுக்கு துணி தானம், ஏழை குழந்தைகளுக்கு படிக்க உதவுவது முதியோர்களுக்கு உணவு வாங்கி தருவது போன்ற நல்ல காரியங்களால் நம்மை சுற்றியிருப்பவர்கள் நம்மை பொறாமையுடன் பார்க்காமல் நல்ல பார்வையுடன் அணுகுவார்கள்.